மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, அப்படி ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. அதிகாரிகள் ஏதாவது ஒரு பெரிய கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள பெரிய விவசாயிகளை மட்டும் பார்த்துவிட்டு வந்துவிடுகிறார்கள் என்ற குறை இருக்கிறது. ஆகையால் மாதிரிப் பண்ணைகள் பல அமைத்து, எல்லா விவசாயிகளையும் அழைத்து, ஆய்வின் பலன்களை விளக்க வேண்டும் என்ற திட்டம் ஆய்வில் இருக்கிறது.

New Agricultural Seed Farms

* 496 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received any proposal from the Agricultural University at Coimbatore on the question of starting an Agricultural Seed Farm in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

* 497 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காப்பி, தேயிலை, வாழை, புகையிலை போன்ற பயிர்களை நல்ல முறையில் அபிவிருத்தி செய்திட அவைகளுக்கான விதைப் பண்ணைகளைத் துவக்கிடும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இல்லை.

திரு. என் கிட்டப்பா: தலைவரவர்களே, அவரை முதல் துவரை வரை ஆராய்ச்சி செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது காப்பி, தேயிலை, வாழை, புகையிலை போன்ற பயிர்களை அபிவிருத்தி செய்வது பற்றியும் இனிமேலாவது ஆராய்ந்து அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இந்த காப்பி, தேயிலை, புகையிலை போன்ற பயிர்கள் எல்லாம் அவரை முதல் துவரை வரை என்ற பகுதியில் அடங்காது. காப்பிக்கு

1973 நவம்பர் 30]

காப்பி போர்டு தனியாக இருக்கிறது. டீ போர்டு தனியாக இருக்கிறது. புகையிலைக்குக்கூட தனி நிறுவனம் இருக்கிறது. அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, வேளாண்மைத் துறையில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்து வருகின்ற நம்முடைய மாநிலத்தில் மேலும் தீவிரமாகச் செயல்பட, பம்பாயிலே டிராம்பே அணு ஆராய்ச்சி நிலையத்தின் முடிவுகளைப் பயன்படுத்தி விதைகளில் அணுக் கதிர்களைச் செலுத்தி, இன்னும் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்களே, அந்த முறையை நம்முடைய மாநிலத்தில் அமுல் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அணுக் கதிர்களைச் செலுத்துவதன் மூலம் விதையின் உருவத்தை மாற்ற முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிய ஆராய்ச்சியில் நம்முடைய கோவை பல்கலைக்கழகம் ஈடுபட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருமுறை அந்த பல்கலைக் கழகத்திற்கு சென்று பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, வாழைப்பயிர் இப்போது ஒருவித நோயால் பாதிக்கப்பட்டு அழிந்துபோகிறது. அந்த நோய் எதனால் ஏற்படுகிறது என்று ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாழைப்பயிர் மிக அதிகமாக இருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுபோன்ற ஆராய்ச்சியை அவ்வப்போது நடத்தி, வாழைப்பயிரைக் காப்பாற்ற அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை தொடங்கவேண்டு மென்று மக்கள் கேட்கிறார்களே, அதன் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயப் பல்கலைக் கழகமோ, கல்லூரியோ ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது இல்லை. வாழைப் பயிரைப் பாதுகாக்கத் தான் பனானா பாக்கேஜ் ஸ்கீம் என்பதாக வடாற்காடு, கோவை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இன்றைக்குச் செயல்படுகிறது.

திரு. எஸ். வடிவேல் : தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் பிரதானமாக இருக்கிற காரணத்தினால் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அப்படிப்பட்ட செயற் குறிப்பு தற்போது இல்லை.

திரு. கே. எ. வகாப் : அணுசக்தி மூலம் விதைக்கு ஊக்கம் அளிக்க ஆராய்ச்சி நடத்தப்படுவதாகச் சொன்னார்கள். அது போன்ற ஆராய்ச்சியை நடத்தியுள்ள நாடுகளில் அந்த விதைகளில் உண்டாகக்கூடிய தானியங்கள் மனிதனின் வாழ்க்கைக்குத் தகுந்தது அல்ல என்று முடிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறதே, அந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் நமக்குக் கிடைத்தனவா ? மேலும் ரசாயன உரங்கள் மூலம் உற்பத்தியாகிற தானியங்களே மனிதனது ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல என்கிற கருத்து பரவலாக இருக்கிறதே, அதைப்போக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ரசாயன உரம் போடு வதன் மூலம் உற்பத்தியாகக் கூடியவைகள் மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியது என்கிற கருத்து அறவே நீக்கப்படவேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட பூச்சி மருந்துகளை, ரசாயன உரங்களை நாம் பயன்படுத்தாவிட்டால் நாம் உற்பத்தியைப் பெருக்க முடியாது. ஆகவேதான் இப்படிப்பட்ட கருத்துக்களுக்கு இடமே கொடுக்கக்கூடாது. நமக்கு ரசாயன உரமும் வேண்டும், பூச்சி மருந்துகளும் வேண்டும்.

அடுத்தாற்போல டிராம்பே அணு ஆராய்ச்சியைப்பற்றிச் சொன்னார்கள். அவரை கொடியில் காய்க்கிறது என்றாலும் அது செடியிலே காய்க்க, அதற்கான விதை ஆராய்ச்சிகளை எல்லாம் புதிது புதிதாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆயினும் அவை எல்லாம் இன்னும் ஆராய்ச்சிக் கட்டத்திலேயே இருக்கிறது. விதைகள் இன்னும் வழங்கப்படவில்லை.

Sindhi Bulls sold by Hosur Cattle Farm

* 498 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of Sindhi Bulls sold at the District Live-stock Farm, Hosur in Dharmapuri district in 1973;

(*b*) the price for which they were sold; and

(*c*) the reasons for their sale?